பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 06 செவ்வாய்க்கிழமை 19.01.2021 கதிர் 306

## யாழ். ஒருங்கிணைப்புக் குழுவின் முதல் கூட்டம் பெப்ரவரி 2 இல்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 2 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் இணைத் தலைவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் வடக்கின் அனைத்து மாவட்ட

2

சுமந்திரன் எம்.பி. இன்று சபையில் காட்டம்:

# ரஞ்சனுக்கு அநீதி இழைக்கப்பட நாடாளுமன்றின் தவறே காரணம்

### உரிய சட்டம் இல்லாததால் நீதிமன்று தீர்ப்பளிப்பதில் காட்டுக் கழுதைக்குச் சுதத்திரம் கிடைத்த நிலைமை

**கொழும்பு,ஜனவரி 19**

**நேர்மையானதொரு நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சன் ராமநாயக்காவுக்கு அசாதாரணமுறையில் அநீதி இழைக்கப்பட வழி வகுத்தது நாடாளுமன்றத்தின் தவறு. நாடாளுமன்றம் உரிய சட்டத்தை உரிய முறையில், உரிய நேரத்தில் யாக்கத் தவறியமையாலேயே இந் நிலைமை ஏற்பட்டது என்பதை நாடாளுமன்றத்தில் இன்று சுட்டிக் காட்டினார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன்.**

2



## ரஞ்சனை சபைக்கு அழையுங்கள் இல்லையேல் போராட நாம் தயார்

### சபாநாயகரிடம் சஜித் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை சபைக்கு அழைக்கவில்லை என்றால் ஜனநாயக வழிகளிலும் போராட நாம் தயாராகவே இருக்கின்றோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குக் கிடைத்துள்ள

2



## யாரையோ திருப்திப்படுத்தவே 'உதயன்' நாளிதழ் மீது வழக்கு

### நீதிமன்றில் எடுத்துரைப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.19

யாரையோ திருப்திப்படுத்தி அவர்களுக்கு விசுவாசமாகச் செயற்படுவதற்காகவே யாழ்ப்பாணப் பொலிஸார் வன்மத்துடன் 'உதயன்' பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் போன்றே உள்ளது என சட்டத்தரணி வி.திருக்குமரன் இன்று நீதிமன்றத்தில் எடுத்துரைத்தார்.

2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம்

2

## காணி சுவீகரிப்புக்கு எதிராக வேலணையில் ஆர்ப்பாட்டம்!

### படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீளவும் மக்களிடமே வழங்குமாறும் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

பொதுமக்களின் காணிகளைச் சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், காணி சுவீகரிப்புச் செயற்பாடுகளை நிறுத்தக் கோரியும் வேலணை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான் பிரதேசத்தில் 11 பேருக்குச் சொந்தமான 5 ஏக்கர் காணியைக் கடற்படையின் தேவைக்காகச் சுவீகரிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களத்தால்

2



## புதிய யாழ். தளபதி இன்று பதவியேற்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்ப்பாணம் மாவட்டக் கட்டளைத் தளபதியாக இன்று முதல் மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா பதவி ஏற்றுள்ளார்.

இதுவரை நாளும் யாழ் . மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சேனரத் பண்டார பதவி உயர்வுடன் கொழும்பிற்கு இடமாற்றலாகிச் சென்றதமையால் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி பதவி வெற்றிடம் ஏற்பட்டது.

இந்த வெற்றிடத்திற்கே நேற்று வரை வன்னி கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஜனாதிபதியை ஏன் இன்னமும் சுய தனிமைப்படுத்தவில்லை?

### நாடாளுமன்றில் எதிர்க்கட்சி கேள்விக்கணை



இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமான தொடர்பைப் பேணிய ஜனாதிபதி ஏன் இன்னமும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை?

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக்கள் சக்தியின்

2

## 4 தமிழக மீனவருடன் ட்ரோலரைக் காணோம் இலங்கைக் கடற்படை மோதி மூழ்கடித்ததா?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.19

இலங்கைகடற்பரப்பிற்குள்ஊடுருவிய இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகு ஒன்று இலங்கை கடற்படையினரின் கப்பலுடன் மோதிய நிலையில் அதிலிருந்த நான்கு மீனவர்களுடன் காணாமல் போயுள்ளதாக இந்தியத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை கடல் எல்லைப்

2

## குமிழமுனை குருந்தூர்மலையில் முச்சூலம் பிடுங்கி எறியப்பட்டதா?

### நடந்தவற்றைத் தெளிவுபடுத்துகின்றார் சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சி

முல்லைத்தீவு மாவட்டம் குமிழமுனைக்குஅண்மித்தானகுருந்தக்குன்றில் (குருந்தூர்மலையில்) அருள்மிகு ஆதி சிவ இலிங்கேச்சரர் திருக்கோயில் மூலவரான முச்சூலம் பிடுங்கி எறியப்பட்டதாக வந்த செய்திகள் தவறானவை.

2

## குமிழமுனை குருந்தூர்மலையில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை சிவ சேனை அமைப்பின் தலைவர்மறவன்புலவுக.சச்சிதானந்தன் 'முச்சூலத்தை எவரும் அகற்றவில்லை' என்ற தலைப்பில் இன்று விடுத்த அறிவிப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தமலையில்கோயில்பிரகாரத்தில் நாட்டப்படும் சூலம் அடிக்கடி காணாமலாக்கப்படுவதும்புதிதாகசூலம்நடப்படுவதும் வழமை. அப்பகுதியில் கட்டடங்கள் அமைக்கக் கூடாது என்ற நீதிமன்ற உத்தரவு காரணமாக சூலத்தை கொங்கிறீட் போட்டு நிலைநிறுத்த முடிவதில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. கடந்த முதலாம் திகதி புதிய சூலம் நடப்பட்டு பொங்கல் படைக்கப்பட்டது. அதன் பின்னரும்சிலதினங்களில்வழமைபோலவே அச்சூலம்காணாமல்போகச்செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் மறவன்புலவு க. சச்சிதானந்தன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குன்றின் உச்சியில் உள்ள சைவ வழிபாட்டு இடம் எந்தவித மாற்றமும் இன்றி அப்படியே தொடர்கிறது. குருந்தக் குன்று திருக்கோயில் அறங்காவலர் இதனை என்னிடம் தெரிவித்தார்கள். மேலும் விவரம் பெற விரும்புவோர் திருக்கோயில் அறங்காவலர் திரு .சசிகுமார் அவருடன் தொடர்புகொண்டு விவரங்களை அறியலாம்.

குருந்தன்குளம் அணைக்கட்டுக்கு அருகே மலையடிவாரத்தில் உடைந்த கட்டடம் இருந்தது. நான் நேரில் பார்த்திருக்கிறேன். அங்கு புதிதாக ஒரு கட்டடத்தைக் கட்ட முயன்றதால் நீதிமன்றத்தில் வழக்கு.

உடைந்த அந்தக் கட்டடத்தின் அருகே தொல்லியல் மாணவர்கள் ஜெயவர்த்தனபுரப்பல்கலைக்கழகத்தில் இருந்து வந்தனர். மேசை மீது புத்தர் சிலை ஒன்றை வைத்தனர். வணங்கினர். அந்த இடத்தில் நிலத்தைத் தோண்டவில்லை, நோண்டிப் பார்த்தனர்.

அமைச்சர் வந்திருந்தார். படைப் பிரிவினரும் வந்திருந்தார்கள். புத்தபிக்குகள் எவரும் அங்கு வரவில்லை.

படைப்பிரிவின் காப்பரண் நெடுங்காலமாகவே அங்கு உண்டு. படைவீரர் ஒருவரோ இருவரோ இருப்பார்கள். கடமைக்கு வராத நாள்களே கூடுதலானவை.

சைவக் கோயிலுக்குச் செல்வதற்குத் தடை ஏதுமில்லை. பொங்கலுக்குத் தடையில்லை. வழிபாட்டுக்கு தடையில்லை என அமைச்சரே அறங்காவலரிடம் கூறியுள்ளார்.

முழுமையான தகவல் அறியாமலே முச்சூலம் அகற்றியதாகத் தவறான செய்திகள் வெளியாகி சைவ உணர்வாளர்களின் மனம் புண்ணாகியதே.

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் குமிழமுனை வழியாகச் சைவ உணர்வாளர்கள் வழிபாடு பயணமாக குருந்தக் குன்று சென்று குருந்த மர நிழலில் அமர்ந்து இருக்கும் சிவபெருமானை வழிபட்டு அருள் ஆசி பெற்று வருவார்களாக. - என்றார்.

## ஜனாதிபதியை ஏன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் ஹேரா விதானகே.

நாடாளுமன்ற அமர்வில் இன்று கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கேள்வியை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதிகோட்டாபயராஜபக்‌ஷவுடன் இராஜாங்க அமைச்சர்பியல்நிஷாந்தவும் டயர் தொழிற்சாலையொன்றின் திறப்பு விழாவில் கலந்துகொண்டார்.

எனினும், இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுக்குக் கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்படியென்றால் ஜனாதிபதியைச் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவது அவசியமில்லையா?

எமது ஆட்சிக் காலத்தில் விளையாட்டு டயர் நிறுவனம் ஒன்றை நாம் ஆரம்பித்துள்ளதாக விமர்சித்தவர்கள்தான் தற்போது அதே டயர் நிறுவனத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

எனவே, இப்போதைய அரசு எதிர்கட்சியாக இருந்த காலத்தில் எம் மீது முன்வைத்த விமர்சனங்கள் அனைத்தும் பொய்யானவையாகும். நாட்டு மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

## 4 தமிழக மீனவர்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பில் திங்கட்கிழமை இரவு மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களிற்குச் சொந்தமான ஒரு ட்ரோலர் படகையும் அதில் பயணித்த நான்கு இந்திய மீனவர்களையும் காணவில்லை என இந்திய நீரியல் வளத் திணைக்களம் இந்தியக்கடலோரகாவல்படையினருக்கு அறிவித்துள்ளனர்.

இதேநேரம்இலங்கைகடற்படையின் கப்பல் ஒன்றுடன் ஒரு விபத்து ஏற்பட்டதில் கடற்படையினரின் கப்பலிற்கு சேதம் ஏற்பட்டு திருத்தப் பணிக்காக கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கைக் கடற்படை தெரிவிக்கின்றது.

இவற்றின் அடிப்படையில் இலங்கை கடற்படையினரின் கப்பலில் இந்தியாவில் இருந்து மீன்பிடிக்குப் புறப்பட்டு காணாமல்போன படகே மோதியிருக்கலாம் என சந்தேகிக்கும் அதேநேரம் காணாமல்போன இந்திய படகில் இருந்த மீனவர்கள் நால்வரிற்கும் என்ன நடந்தது என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் காணாமல்போன ட்ரோலருடன் அருகில் இருந்த இரண்டு இந்திய ட்ரோலர்களில் இருந்த மீனவர்கள் நடந்த விடயங்களை இந்திய அதிகாரிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்திருக்கின்றனர் எனவும் தெரிகிறது.

கச்சதீவிற்கும் நெடுந்தீவிற்கும் இடைப்பட்ட பகுதியில் தமது ட்ரோலரை கடற்படையினர் மோதி நாசமாக்கியமையால் தங்களுக்கு உதவி புரியுமாறு அந்த ட்ரோலரில் இருந்தோர் ஏனைய ட்ரோலர்களில் இருந்தவர்களிடம் உதவி கோரியபோது, வலையை அறுத்துவிட்டுத் தப்பிக்குமாறு அவர்கள் பதிலளித்தனர் என்றும், ட்ரோலர் கடுமையாக சேதமடைந்து நீர் உட்புகுவதாக இரவு 8 மணிக்கு முன்பு இறுதியாக அவர்கள் பதில் தகவல் வழங்கினர் என்றும் இந்தியத் தரப்பில் தகவல் கூறப்படுகின்றது.

இதேநேரம் இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகு பயணித்த பகுதியில் இன்று பகல் முழுவதும் இந்தியக் கடலோரப் படையினர் தேடுதலில் ஈடுபட்ட போதும் காணாமற்போன படகோ, மீனவர்களோ கண்டு பிடிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

## காணி சுவீகரிப்புக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவீடுசெய்யப்படுவதாகஅறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காணி உரிமையாளர்களும் பிரதேச மக்களும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இணைந்து இன்று போராட்டமொன்றை முன்னெடுத்தனர். ஆயினும், காணி அளவீட்டுத் திணைக்கள அதிகாரிகள் காணி அளவிடுவதற்கு இன்று அங்கு வருகை தரவில்லை .

ஆனபோதும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீண்டும் மக்களிடமே வழங்கக் கோரி வேலணைப் பிரதேச செயலகத்துக்குப் பேரணியாகச் சென்ற மக்கள் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து அங்கு பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு பிரதேச செயலகத்துக்குள் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உள்நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், மக்களின் காணிகளைச் சுவீகரிப்பதை நிறுத்த வேண்டும் என வலியுறுத்திப் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இவ்வேளையில் அங்கிருந்தவர்களிடம் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர் சோதிநாதன், இந்தக் காணிகளைச் சுவீகரிக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டாலும் அதில் மக்களது விருப்பு மின்மை அல்லது மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதால் அதனை நாம் தற்காலிகமாக இடைநிறுத்துகின்றோம். இது தொடர்பில் காணி அமைச்சுக்குத் தெரியப்படுத்தி அதன்பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்க முடியும் - என்றார்.

இதையடுத்துப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

## யாரையோ திருப்திப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் அன்று, அவரது படத்துடன் உதயன் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. இது தொடர்பில் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸாரால் நீதிமன்றுக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஒளிப்படம் பிரசுரிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு மார்ச் மாதம் 26ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டிருந்தபோதும்

மீண்டும் டிசெம்பர் 7ஆம் திகதி நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்து வழக்கை எடுக்க பொலிஸார் கோரினர்.

இந்த கோரிக்கையில் தமது வழக்கு விசாரணைக்கு வாக்குமூலம் வழங்க உதயன் சார்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது என்று நீதிமன்றில் குறிப்பிட்டனர். இதற்கு அமைவாக நீதிமன்றால், உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் கு.டிலீப்அமுதன் ஆகியோரை மன்றில் இன்றை தினம் முன்னிலையாகுமாறு அழைப்பு அனுப்பப்பட்டது.

மன்றில் உதயன் பத்திரிகையின் சார்பில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனின் வழிகாட்டலில், மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரனின் நெறிப்படுத்தலில், ம.டெனிசியஸ், தி.கணாதீபன், த.திவாகர், எஸ்.ரிசிகேசன், பு.அபிதன் ஆகியோர் முன்னிலையாகினர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படம் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தினரால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாக்குமூலம் வழங்குமாறு உதயன் பத்திரிகையிடம் கோரப்படவில்லை என்றும், வேறொரு செய்தி தொடர்பில் வாக்குமூலம் வழங்க வருமாறு கோரப்பட்டதற்கு உதயன் பத்திரிகையின் சார்பில் பதிலளிக்கப்பட்டது என்பதையும் சட்டத்தரணி வி.திருக்குமரன் எடுத்தியம்பினார்.

அத்துடன் ஈ.சரவணபவன், தான் மேற்கொண்ட முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் வழங்க பொலிஸ் நிலையம் சென்ற சந்தர்ப்பத்தில் வேண்டுமென்றே நீண்ட நேரம் அவரைக் காக்க வைத்துவிட்டு, ஒளிப்படம் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பில் கேட்கப்பட்டது. அதற்கும் அவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை. செய்திகள் தொடர்பில் ஆசிரியர்பீடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கூறினார் என்பதையும் மன்றில் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

பொலிஸார் தமக்கு வேண்டிய யாரையோ திருப்திப்படுத்த தமது விசுவாசத்தைக் காண்பிக்கும் வகையில் வன்மத்துடன், மன்றைப் பிழையாக வழிநடத்தியுள்ளனர் என்று சட்டத்தரணி எடுத்துரைத்தார். அத்துடன் தமது கட்சிக்காரர்கள் வாக்குமூலம் வழங்கத் தயாராக இருக்கிறார்கள் எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து நாளைய தினம் காலை 9 மணியிலிருந்து 12 மணிக்குள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சிறு குற்றத்தடுப்பு பிரிவில் வாக்குமூலத்தை வழங்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் அ.பீற்றர்போல் குறிப்பிட்டார்.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படத்துடன் சிங்கள, ஆங்கில மற்றும் வேறு தமிழ் ஊடகங்கள் செய்திகளைப் பிரசுரித்துள்ள நிலையில், உதயன் பத்திரிகை மீது வேண்டுமென்று, யாருக்கோ தமது விசுவாசத்தை காட்டுவதற்கு பொலிஸார் இவ்வாறான வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர் என்று சட்டத்தரணி வி.திருக்குமரன் மன்றில் எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இந்த வழக்கு மார்ச் மாதம் 19ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டது.

## ரஞ்சனை சபைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைத்தண்டனையை அடுத்து, அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குத் தற்போது சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை 6 மாதங்களுக்கு இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. நாம் இது தொடர்பாக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம்.

அதாவது அரசமைப்பின் 66, 89, 91, 105 ஆவது அரசமைப்புக்கு இணங்க, அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்தாகாது எனத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால், அதற்கு எதிராக அனைத்து ஜனநாயக வழிகளிலும் போராட நாம் தயாராகவே இருக்கின்றோம் என்பதையும் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தநிலையில், அவரை ஏன் நாடாளுமன்றுக்கு இன்று அழைக்கவில்லை எனச் சபாநாயகரிடம் நான் கேட்க விரும்புகின்றேன். அவர் சிறந்த ஓர் அரசியல்வாதி. பொய், ஊழல், இனவாதம் அற்ற ஓர் அரசியல்வாதி. அவர் மக்களின் மனங்களை வென்றவர். இப்படியான ஒருவரை ஏன் இன்று நாடாளுமன்றுக்கு அழைக்கவில்லை என்பதற்குப் பதில் கோருகின்றேன் - என்றார்.

## யாழ். ஒருங்கிணைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இடம்பெற்றபோதும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மட்டும் இழுபறி நிலைமையில் நடைபெறாமல் இருந்து வந்தது. இணைத் தலைவர்களில் ஒருவரான ஆளுநர் கூட்டத்தை நடத்தக் கடும் அழுத்தமும் கொடுத்து வந்தார். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறாமல் அது தொடர்பான அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டாம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இப்போது முதல் தடவையாக பெப்ரவரி 2ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட இணைத் தலைவர்கள் தலைமையில் இடம்பெற ஏற்பாடாகி உள்ளது.

## ரஞ்சனுக்கு அநீதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஞ்சன் ராமநாயக்க அவர்களின் நீதிமன்ற அவமதிப்பு தீர்ப்பு தொடர்பான இன்றைய நாடாளுமன்ற விவாதத்தில் தமது கருத்தைத் தெரிவித்த சுமந்திரன் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ரஞ்சன் ராமநாயக்கவின் அந்த வழக்கில் அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நானே. நேர்மையானதொரு அரசியல்வாதியின் சார்பில் நான் அவ்வழக்கை முன்னெடுத்தமையில் பெருமையடைகிறேன்.

துரதிஷ்டவசமாக அவர் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு நான்கு வருடக் கடூழியச் தண்டனை விதிக்கப்பட்டமை அசாதாரணமானதும் பாரதூரமானதொரு நிகழ்வுமாகும்.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக சட்டங்கள் இயற்றப்படாத காரணத்தினால் நாடாளுமன்றம் இதற்கு பொறுப்புகூற வேண்டிய அவசியமுள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பொதுப் பட்டியலில் போட்டி?

சரியோ, பிழையோ ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் மார்ச் மாத அமர்வில் எடுக்கப்படவிருக்கும் இலங்கை விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள், தரப்புகள் ஒன்றுபட்டு ஒரு நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றன.

தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் பெரும் ஆதிக்க சக்தியாய் முழு அதிகாரத்துடன் விஸ்வரூபம் பெற்றிருக்கையில் –

தமிழ்த் தேசியத்தை – அதன் தாயகமான வடக்கு, கிழக்கைச் சிதைத்தழிப்பதே சிங்களத்தின் ஒட்டுமொத்தமான ஒரே இலக்காக இருக்கையில் –

தமிழ்த் தேசிய சக்திகள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு, தமது இருப்பையும், தனித்துவத்தையும் தக்க வைத்துக் கொள்வது அத்தியாவசியமானது என்ற பொறுப்புணர்வில் எழுந்ததே தமிழ்த் தேசியக் கட்சிகளின் இந்த ஐக்கிய நிலைப்பாட்டு ஏற்பாடாகும்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் போன்ற இனி வரப் போகின்ற அரசியல் நடவடிக்கைகளிலும் இப்படி ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய கட்டாயம் – தேவை – அத்தியாவசியம் – தமிழ்த் தேசிய சக்திகளுக்கு உள்ளது.

அந்த வகையில் இன்னொரு விவகாரம்தான் மாகாண சபைத் தேர்தலாகும்.

வடக்கிலும், கிழக்கிலும் – குறிப்பாகக் கிழக்கில் – தமிழ்த் தேசியத் தரப்புகள் பிளவுபட்டு நிற்கின்றமை முதலுக்கே மோசம் என்ற நிலைமையைத் தரக் கூடியது. தமிழர் தரப்பில், சிங்கள தேசத்துடன் அரசியல் தோழமை பூண்டு, அதன் பெறுபேறாகத் தமிழ்த் தேசிய இருப்பின் அழிவுக்குத் துணை போய்க் கொண்டிருக்கும் சக்திகள் வலிமை பெற்று வருகின்றன. அவை சிங்கள, முஸ்லிம் தரப்புகளுடன் ஒன்றுபட்டுச் செயற்பட, தமிழ்த் தேசிய சக்திகள் தமக்குள் பிளவுபட்டு நின்றால், அதன் பெறுபேறு, தமிழ்த் தேசிய அழிப்பு நடவடிக்கைகளுக்கான அத்திபாரமாகி விடும் என்பது அரசியல் அரிச்சுவடி படித்தவருக்கும் விளங்கக் கூடிய விவகாரமாகும்.

மாகாண சபைகளைக் கைப்பற்றுவதன் மூலம் ஏதேனும் சாதிக்கலாம் என்பதை விட, அவற்றைத் தமிழ் தேசியத்துக்கு விரோதமான தரப்புகள் கைப்பற்றுவதன் வாயிலாகத் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கே சவாலாக எழக் கூடிய சூழ்நிலைகளைத் தவிர்க்கலாம் என்பதே முக்கியம்.

சுருங்கச் சொல்வதாயின், ஏனைய அரசியல் விடயங்களுக்காகத் தமிழ்த் தேசியத் தரப்புகள் தங்களுக்குள் ஒன்றிணைவது போன்று மாகாண சபைத்தேர்தல்களையும் ஒன்றுபட்டு எதிர்கொள்வது வரலாற்றுக் கட்டாயமாகின்றது.

மூன்று முனைகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிளவுபட்டு நிற்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் பல கட்சிகள் வேறு. இந்தச் சூழலில் மூன்று கூட்டுகளும் ஒன்றிணைந்து வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பொது வேட்பாளர் பட்டியலைச் சமர்ப்பிப்பது என்பது சாத்தியமானதா என்பது கேள்விக்குறியே.

பொது வேட்பாளர் பட்டியலை முன்வைக்க இணங்கினாலும் பல்வேறு உதிரிக் கட்சிகளையும் சேர்ந்தோர் தேர்தல்களின் பின்னர் ஒன்றுபட்டு ஆட்சியமைப்பதோ, கூட்டாகச் செயற்படுவதோ நடக்கக் கூடியதா என்ற கேள்வியும் உண்டு. முதலாவது வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் நமக்கு நல்லதோர் முன்னுதாரணமாகும்.

இந்தப் பின்புலத்தில்தான் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கட்சிப் பிரமுகர்களைத் தவிர்த்து, துறைசார் நிபுணர்களை உள்ளடங்கிய பொதுப் பட்டியலில் போட்டியிடுவது குறித்த ஒரு யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இது குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் ஆலோசனை நடத்தியுள்ளார் என்று தகவர்கள் வெளியாகியுள்ளன.

இது விடயத்தில் இத்தகை யோசனையை சுமந்திரன் இப்போது முன்வைத்தாரா, அது உண்மையா என்பது தெரியவில்லை. ஆனால் இத்தகைய யோசனையை முதன் முதலில் முன்வைத்தவர்கள், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினர்தான்.

2013 செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடக்க முன்னர் – தமது முதல்வர் வேட்பாளராக நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை தமிழ்க் கூட்டமைப்பு அறிவிக்க முன்னர் – அரசியல் கட்சிகள் சாராத துறைசார் நிபுணர்களை வேட்பாளர்களாக நிறுத்த முன்வந்தால் ஒன்றுபட்டுச் செயற்படும் வகையில் அதனை ஆதரிக்க முடியும் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினர் அப்போது யோசனை முன்வைத்திருந்தனர். தமிழ்க் கூட்டமைப் பினர் தங்களுக்கு வெற்றி நிச்சயம் என்ற உறுதிப்பாடு இருந்தால் அந்த அழைப்பை உதாசீனப்படுத்தித் தனிவழிபோயினர். எதிர் பார்த்தபடி வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றினர். கடைசியில் அதைப் போட்டடித்தனர்.

இப்போது மீண்டும் நெருக்கடி நிலைமை. பிளவுபட்டால் முதலுக்கே ஆபத்தாகும் நிலைமை. அதனால் ஐக்கியப்பட்ட பட்டியல் பற்றிப் பேசுகின்றனர். அது வரலாற்றுக் கட்டாயம் என்பது மட்டும் உண்மை.

# மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்து நாளை பேச்சு!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



அடுத்த இரு வாரங்களுக்குள் மேல் மாகாணத்தில் அனைத்து தர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக விசேட கலந்துரையாடல் நாளை (புதன்கிழமை) இடம்பெறவுள்ளது.

சுகாதார அதிகாரிகள், ஜனாதிபதி செயலணி மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், மேல் மாகாணத்தில் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்காக சுகாதார ஆலோசனையின் பிரகாரம் கடுமையான திட்டம் வகுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்தில் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை திறக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் எதிரொலித்த பல்கலை நினைவுத் தூபி!

யாழ். பல்கலைக்கழகத்தில் மீண்டும் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை கட்டுவது தொடர்பான செய்தியொன்று இந்தியாவிலிருந்து இலங்கைத் தலைமைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நள்ளிரவில் இடித்தழிக்கப்பட்ட நிலையில் தமிழகத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பை அடுத்து இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இதன்போது முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்ட சம்பவமானது தென்னிந்திய மாநிலமான தமிழகத்தில் எதிர்ப்புக்களை மேலும் பரவ வழிவகுக்கும் என உயர் ஸ்தானிகர் பிரதமர் ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவமானது போரில் இழந்த தங்கள் அன்புக்குரியவர்களை நினைவு கூரும் தமிழர்களின் உரிமையைத் தடுக்கும் முயற்சி தொடர்பாகக் கடுமையான விமர்சனங்களை எழுப்பியது.

இந்த இடிப்பை அடுத்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட மாணவர்களை சந்தித்த யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா நினைவுத்தூபி மீளவும் கட்டி எழுப்பப்படும் என உறுதி அளித்தார்.

மேலும் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, தி.மு.க. தலைவர் எம்.கே ஸ்டாலின் மற்றும் எம்.டி.எம்.கே பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் இந்த நடவடிக்கையைக் கடுமையாக கண்டித்தனர்.

புதுடில்லி இந்த சம்பவம் தொடர்பாக உத்தியோகபூர்வ கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றாலும் இராஜதந்திர ரீதியில் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு பல்கலை விடுதியில் கொரோனாத் தொற்றாளர்!

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் அடையாளம் காணப்பட்ட 3 கொரோனா தொற்று நோயாளிகளில் ஒருவர் பல்கலை விடுதியிலே தங்கி இருக்கிறார் என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட மூவரில் இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக அழைத்து செல்லப்பட்டுள்ள போதும் மற்றொருவர் இரண்டு நாள்களாக தொடர்ந்தும் தங்கி இருக்கிறார் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதம் 6 ஆம் திகதி திருகோணமலை வளாகத்துக்குத் தாம் வருகை தந்ததாகவும் அவ்வாறு வரும்போது எந்த விதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

மேலும் அனைத்து மாணவர்களும் பொது மலசல கூடங்களைப் பயன்படுத்துகின்றனர் எனவும் உணவு உண்ணும் அறையில் தாம் ஒன்று கூடுவதன் காரணமாகத் தம்மைத் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள தாம் போராடி வருகின்றனர் எனவும் மாணவர்கள் விசனம் தெரிவித்தனர்

இதனால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு இதற்கான தகுந்த முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மின் கட்டணம் செலுத்த 6 மாத கால அவகாசம்!

## அமைச்சரவை அனுமதி

இலங்கையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்போரின் மின் கட்டணத்தை செலுத்துவதற்கு 6 மாத கால சலுகை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு இன்று (செவ்வாய்க்கிழமை) அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

அதன்படி தொடர்ந்து 14 நாள்களுக்கு மேலாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்போருக்கே இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறிப்பிட்ட காலப்பகுதி வரையில், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் மின்சார விநியோகம் துண்டிக்கப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் மேலும் 20 பேருக்கு தொற்று!

வவுனியா - பட்டாணிசூர் பகுதியை சேர்ந்த 20 பேருக்கு இன்று (செவ்வாய்க்கிழமை) கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா - பட்டாணிசூர் பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அந்தப் பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் ஒருபகுதி முடிவுகள் நேற்று வெளியாகியன.

அதனடிப்படையில் அந்தப் பகுதியை சேர்ந்த 20 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியாவில் இதுவரை 222 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தலைவர் டாக்டர் சாந்தா காலமானார்



புகழ்பெற்ற புற்றுநோய் மருத்துவ நிபுணரும், சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் டாக்டர் சாந்தா. இவருக்கு 93 வயது. ஏழை, எளிய மக்களுக்கு புற்றுநோய் சிகிச்சை எளிதில் கிடைக்க அரும்பணியாற்றியவர்.

இதய நோய் மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக அப்பல்லோ மருத்துவமனையில் டாக்டர் சாந்தா அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தநிலையில் சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.

டாக்டர் சாந்தாவின் உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

# சசிகலாவுக்கு இனி அ.தி.மு.கவில் இடமில்லை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

சசிகலாவை அ.தி.மு.கவில் இணைக்க பேச்சுவார்த்தை எதுவும்நடைபெறவில்லைஎன தெரிவித்துள்ள முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, சசிகலாவுக்கு இனி அ.தி.முகவில் இடமில்லை என திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களை சந்தித்த முதலமைச்சரிடம், சசிகலாவை அ.தி.மு.கவில் இணைக்க பேச்சு நடைபெற்று வருவதாகக் கூறப்படுவது பற்றி செய்தியாளர்கள் கேட்டபோது, எடப்பாடி பழனிசாமி அதை திட்டவட்டமாக மறுத்தார்.

பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா சந்திப்புக்களின்போது கூட்டணி, தொகுதிப் பங்கீடு குறித்து பேசப்பட்டதா என கேட்கப்பட்டது. மோடியிடமோ, அமித்ஷாவிடமோ அரசியல் ரீதியாக எதுவும் பேசவில்லை என தெரிவித்த எடப்பாடி பழனிசாமி, பிரதமரிடம் தமிழக நலன் சார்ந்த திட்டங்கள் குறித்து மட்டுமே பேசப்பட்டது என்றார். தேர்தலுக்கு இன்னும் நாட்கள் உள்ளதால், அரசியல் பேசவில்லை என்றும் முதலமைச்சர் கூறினார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களுக்கு மேலும் கூறியதாவது, புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்ட வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் கோரிக்கை வைத்தேன். எனது கோரிக்கைகளை ஏற்று பிரதமர் மோடி தமிழகம் வருவதாக கூறி உள்ளார்.

# 20 லட்சம் கொரோனா தடுப்பூசி பங்களாதேஷிற்கு பரிசளிப்பு



வங்கதேசத்திற்கு, 20 லட்சம் கொரோனா தடுப்பூசி மருந்துகளை இந்தியா நாளை பரிசாக வழங்க உள்ளதாக வங்கதேச சுகாதாரத்துறை செயலாளர் தெரிவித்துள்ளார்.

சீரம் நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசிகளைப் பெற பல்வேறு நாடுகள் முன்வருகின்றன. அந்த வகையில், 3 கோடி கொரோனா தடுப்பூசிகளை பெறும் பொருட்டு வங்கதே அரசு, சீரம் நிறுவனத்திற்கு இடையே கடந்த மாதம் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிலையில், ஒப்பந்தப்படி கொரோனா மருந்துகளை அனுப்புவதற்கு முன்னதாக, 20 லட்சம் மருந்துகளை தங்களுக்கு இந்தியா பரிசாக வழங்க உள்ளது.

# பிரதமர் மோடி இரங்கல்

டாக்டர் சாந்தா மறைவுக்கு இந்தியப் பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். மோடியின் இரங்கல் செய்தியில் "புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர சிகிச்சை அளித்தவர் மருத்துவர் சாந்தா. அவர் எப்போதும் நினைவுக்கூரப்படுவார். சென்னை அடையாறில் உள்ள புற்றுநோய் நிறுவனம் ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் சேவை செய்வதில் முன்னணியில் உள்ளது. 2018 ஆம் ஆண்டில் நான் சென்னை அடையாறு இன்ஸ்டியூட்டிற்கு சென்றதை நினைவு கூர்ந்து பார்த்தேன். டாக்டர் சாந்தாவின் மறைவு வருத்தம் அளிக்கிறது. ஓம் சாந்தி" எனப்பதிவிட்டுள்ளார்.



# காவல்துறை மரியாதையுடன் அடக்கம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தெரிவிப்பு



தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சென்னை அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தின் தலைவரும், உலக புகழ்பெற்ற புற்று நோய் நிபுணருமான மருத்துவர் சாந்தா அவர்கள் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

மருத்துவர் சாந்தா அவர்கள், 1955 ம் ஆண்டில் அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தில் பணியில் சேர்ந்து பல்வேறு முக்கிய பதவிகளில் பணியாற்றியவர். இவர் தனது தன்னலமற்ற சேவையின் மூலம் பல்வேறு தரப்பினரின் ஆதரவினை பெற்று 12 படுக்கைகளுடன் துவங்கப்பட்ட அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை மேம்படுத்தி, நவீன வசதிகளை கொண்டு வந்து, புற்று நோயால் பாதிக்கப்படும் ஏழை, எளிய மக்களுக்கு இலவசமாக உயர்தர சிகிச்சை அளித்தவர் என்ற பெருமைக்குரியவர்.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க மருத்துவர் சாந்தா அவர்கள் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொண்டு புற்றுநோய் பாதிப்பு உள்ளதா என அடிக்கடி பரிசோதனைகள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தியவர். இவரது மருத்துவ சேவைப் பணிகள் உலக அளவில் பெரிதும் போற்றிப் பாராட்டப்பட்டது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013 ஆம் ஆண்டு, மருத்துவர் சாந்தா அவர்களுக்கு ஔவையார் விருது வழங்கி சிறப்பித்தார்கள்.

மருத்துவர் சாந்தா அவர்களின் மகத்தான மருத்துவ சேவையைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ, பத்ம பூன் மற்றும் பத்ம விபூன் விருதுகளை வழங்கி கௌவுரவித்துள்ளது. இது தவிர, இவருக்கு உலக புகழ்பெற்ற மகசேசே விருதும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மட்டுமல்லாமல், பிற மாநிலங்களிலிருந்து வரும் வறிய நிலையில் உள்ள நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கும் அடையாறு புற்றுநோய் சிசிச்சை மையத்தின் மனிதநேய கொள்கை பாராட்டிற்குரியது. அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தின் உன்னதமான சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு இவ் மையத்திற்கு தேவையான உதவிகளை வழங்கி, இதனை மாநில அளவில் புற்றுநோய் சிகிச்சைக்கான, தலைமை மையமாகவும் அங்கீகரித்துள்ளது.

மருத்துவர் சாந்தா அவர்களின் மறைவு மருத்துவ துறைக்கும், தமிழ்நாட்டிற்கும் மிகப் பெரிய இழப்பாகும். இவருடைய இடத்தை இனி எவராலும் நிரப்ப முடியாது. அவர் மறைந்தாலும், அவரது சிகிச்சை முறைகள் அனைத்து தரப்பு மக்களிடத்திலும் நிலைத்து, அன்னாரது நினைவைப் போற்றிக் கொண்டிருக்கும்.

மருத்துவர் சாந்தா அவர்களை இழந்து வாடும் சென்னை அடையாறு புற்று நோய் சிகிச்சை மையத்தினருக்கு எனது ஆழ்ந்தஇரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

தமிழ்நாடு மட்டுமின்றி இந்திய மக்கள் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்த மருத்துவர் சாந்தா அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையிலும், அன்னாரின் தன்னலமற்ற சேவையினை கௌரவிக்கும் விதமாகவும் அன்னாரின் இறுதி சடங்குகளின் போது காவல்துறை மரியாதையுடன் நல்லடக்கம் செய்ய உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.






# சீனாவில் தங்க சுரங்க விபத்தில் சிக்கிய 12 பேர் 7 நாள்களாக உயிருடன் இருப்பதாகத் தகவல்

சீனாவில் ஹூஷான் (Hushan) தங்க சுரங்கத்தில் கடந்த 10ஆம் திகதி ஏற்பட்ட விபத்தில், 22 பணியாளர்கள் உள்ளேயே சிக்கிக் கொண்டனர்.

கடந்த 10 நாளகளுக்கும் மேலாக சுரங்கத்திற்குள் சிக்கித்விக்கும் தொழிலாளர்களை மீட்க போராடி வரும் நிலையில், 12 பேர் உயிருடன் இருப்பதாக கிடைத்த தகவல் மீட்புப்படையினருக்கு உத்வேகம் அளித்துள்ளது.

இதில் சுரங்கத்தின் நுழை வாயில் பகுதி இடிந்தது இதனால் சுரங்கத்துக்குள் இருந்த தொழிலாளர்கள் 22 பேர் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர். எனினும் சுரங்க நிர்வாகம் விபத்து நடந்த 30 மணி நேரத்துக்குப் பிறகு பொலிஸ் மற்றும் மீட்புக் குழுவுக்கு தகவல் தெரிவித்தது.

மீட்பு பணிகள் தாமதமாக தொடங்கியதால் மீட்புக்குழுவினர் சுரங்கத்துக்குள் சிக்கி இருக்கும் தொழிலாளர்களை நெருங்குவதில் சிக்கல் எழுந்தது. இதனால் 6 நாள்கள் ஆகியும் தொழிலாளர்களின் நிலை என்ன என்பது தெரியாமல் இருந்தது. இந்த நிலையில் விபத்து நடந்த 7 நாள்களுக்குப் பிறகு சுரங்கத்துக்குள் தொழிலாளர்கள் 12 பேர் உயிருடன் இருப்பது நேற்று தெரியவந்தது.



சுரங்கத்தில் உள்ள ஒரு சிறிய துளை வழியாக தொழிலாளர்கள் தாங்கள் உயிருடன் இருப்பதை மீட்பு குழுவுக்கு தெரியப்படுத்தினர்.

இது மீட்புக் குழுவிற்கு நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளித்துள்ளது. இதையடுத்து நூற்றுக்கணக்கான மீட்புக்குழுவினர், தொழிலாளர்கள் 12 பேரையும் பத்திரமாக மீட்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர். அதேசமயம் மற்ற தொழிலாளர்கள் 10 பேரின் கதி என்ன என்பது இன்னமும் தெரியவில்லை.

# ரஷ்ய தலைவருக்கு 30 நாள்கள் சிறை



விமானநிலையத்தில் பொலிஸார் அதிரடியாக கைது செய்யப்பட்ட ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் நவல்னி, 2014 ஆம் ஆண்டு பதியப்பட்ட மோசடி வழக்கில் நவல்னி கைது செய்யப்பட்டுள்ளார் என ரஷ்ய பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நவல்னி உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். அங்கு அவரை 30 நாட்கள் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, நவல்னி மாஸ்கோவில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார்.

30 நாள்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள நவல்னி 'இது நீதியை கேலிக்கூத்தாக்கும் செயல்' என்றார். மேலும், தனது ஆதரவாளர்கள் ரஷ்ய வீதிகளில் இறங்கி போராட வேண்டும் என நவல்னி அழைப்பு விடுத்துள்ளார்.



பாலைவனத்தில் பனிப் பொழியும் அரிதான நிகழ்வு அல்ஜீரியா நாட்டின் அயன்செப்ரா பகுதியில் அரங்கேறியுள்ளது. அப்பகுதியில் நிலவி வரும் கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவு காரணமாக பாலைவனப் பகுதிகள் வெண் போர்வை போர்த்தியது போல் காட்சியளிக்கிறது. இந்த நிகழ்வு கடந்த 1979, 2017, 2018ஆம் ஆண்டுக்கு பிறகு 4 ஆவது முறையாக மீண்டும் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய நாடுகள் மற்றும் பிரேசில் உடனான விமான போக்குவரத்து தடையை நீக்கினார் ட்ரம்ப்



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பெரும்பாலான நாடுகளுக்கு இடையிலான விமானப் போக்குவரத்தை அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி மற்றும் மே மாதம் 24 ஆம் திகதிகளில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பெரும்பாலான நாடுகளுக்கு இடையிலான விமான போக்குவரத்திற்கு தடைவிதித்திருந்தார்.

இந்த நிலையல் தற்போது அமெரிக்கா – ஐரோப்பிய நாடுகள் மற்றும் பிரேசில் நாடுகளுக்கு இடையிலான விமானப் போக்குவரத்திற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அனுமதி அளித்து உத்தரவு பிறப்பித்துள்ளார். இருப்பினும் சீனா, ஈரான் போன்ற நாடுகளுக்கு இடையிலான போக்குவரத்திற்கு தடை நீடிக்கிறது.

# விமானப் பயணத் தடை உத்தரவு தொடரும் பைடனின் செய்தித் தொடர்பாளர் தெரிவிப்பு

ஐரோப்பிய நாடுகள், பிரேசிலில் நாடுகளுக்கு இடையிலான விமான போக்குவரத்திற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வரும் ஜனவரி 26 முதல் அனுமதி அளித்து உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், அந்த தடையை தொடர்வதற்கு பைடன் திட்டமிட்டுள்ளார் என்று பைடனின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் உத்தரவு பகிரங்கப்படுத்தப்பட்ட உடனேயே, பைடனின் செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி எங்கள் மருத்துவக் குழுவின் ஆலோசனையின் பேரில், நிர்வாகம் இந்த கட்டுப்பாடுகளை 1/26 இல் நீக்க விரும்பவில்லை என்று ட்வீட் செய்துள்ளார்.



தொற்றுநோய் மோசமடைந்து, மேலும் புதிய தொற்று வகைகள் உலகெங்கிலும் உருவாகி வருவதால், சர்வதேச பயணங்களுக்கான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான நேரம் இதுவல்ல என்று அவர் மேலும் கூறினார்.

அமெரிக்க அதிபராக ஜோ பைடன் நாளை 20 ம் திகதி பதவியேற்கும் நிலையில் அவர் COVID – 19 கட்டுப்படுத்தும் பல சுகாதார நடவடிக்கைகளை நடைமுறைபடுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க நாடாளுமன்ற வன்முறையில் சபாநாயகரின் லப்டொப்பை திருடிய பெண்?

## ரஷ்யாவுக்கு விற்பனை செய்ய முயற்சி

தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடனுக்கு வெற்றிச் சான்றிதழ் அளிப்பதற்காக அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக்கூட்டம் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது.

அப்போது நாடாளுமன்ற கட்டடத்திற்குள் நுழைந்த ட்ரம்ப் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். இந்த வன்முறையில் பொலிஸ் அதிகாரி உள்பட 5 பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரம் அமெரிக்க அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த வன்முறையின் போது நூற்றுக்கணக்கான ட்ரம்ப் ஆதரவாளர்கள் நாடாளுமன்ற கட்டடத்திற்குள் நுழைந்து பொருள்களை சேதப்படுத்தினர். சிலர் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டிருந்த பொருள்களையும் எடுத்து சென்றனர்.

இந்நிலையில், நாடாளுமன்ற வன்முறையின் போது சபாநாயகர் நான்சி பெலோசியின் அறையில் இருந்த அவரது லேப்டாப் கணனி திருடப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தற்போது பூதாகரமாகி வருகிறது.



இது குறித்து விசாரணை மேற்கொண்டுவரும் FBI (தேசிய புலனாய்வு அமைப்பு), பென்சில்வேனியா மாகாணத்தை சேர்ந்த ஜேன் வில்லியம்ஸ் என்ற பெண் மீது வழக்குப்பதிவு செய்துள்ளது.

ஜேன் வில்லியம்ஸ் தான் நான்சி பெலோசியின் அறையில் இருந்த லப்டொப் கம்பியூட்டரை திருடியதாக FBI அமைப் பால் குற்றம் சுமத்தப்படுகிறது.

திருடிய லப்டாப் கம்பியூட்டரை ஜேன் ரஷ்யாவில் உள்ள தனது நண்பருக்கு அனுப்ப முயற்சித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த நண்பர் லேப்டாப்பை ரஷ்ய உளவு அமைப்பிடம் விற்பனை செய்ய திட்டமிட்டிருந்ததாக FBI அமைப்பு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

தற்போது ஜேன் வில்லியம்ஸ் பென்சில்வேனியாவில் இருந்து தப்பிச்சென்றுவிட்டதாகவும், அவரை தேடும் நடவடிக்கை தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் அமெரிக்க புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான விவகாரம் என்பதால் இந்த நிகழ்வு குறித்து FBI அதிகாரிகள் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். இருப்பினும், அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசியின் லப்டொப் தற்போது எங்கு உள்ளது என்ற தகவலை FBI அதிகாரிகள் வெளியிடவில்லை.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1984.01.30 | பிறந்த திகதி - 1984.09.20 |
| மதம் - இந்து P | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - மூலம் | நட்சத்திரம் - ஆயிலியம் |
| செவ் - ------ | செவ் - 2இல் |
| பாவம் - 20 3/4 | பாவம் - ------ |
| கல்வி - பட்டதாரி | கல்வி - A/L |
| தொழில் - அரச தொழில் | தொழில் - பிரான்ஸ் PR |
| எதிர்பார்ப்பு - அரச தொழில் | எதிர்பார்ப்பு - பிரான்ஸ் போக மணமகன் தேவை |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

# 73 ஆவது சுதந்திர தின கொண்டாட்டம் வழமை போன்று கம்பீரமாக நடைபெறும்!

## பாதுகாப்பு செயலாளர் கூறுகின்றார்



கொரோனா பரவலுக்கு மத்தியில் இம்முறையும் 73 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் நடைபெறும் என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று (திங்கட்கிழமை) ஊடக அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அங்கு மேலும் கருத்து வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சர் -

உலகம் முழுதும் கொரோனா தொற்றுக்கு முகங்கொடுத்துள்ள போதிலும் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 4 ஆம் திகதி கொண்டாடப்படுவதைப் போன்று வழமைபோன்று கம்பீரம் குறையாதவாறு அதேவேளை கடுமையான சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய சுதந்திர தினக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இம்முறை சுதந்திர தின மரியாதை அணி வகுப்பில் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்புப்படை மற்றும் தேசிய மாணவர் படையணி என்பவற்றின் சார்பில் 7 ஆயிரத்து 630 படைவீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

கடந்த வருடத்தைப் போன்று சுதந்திர சதுக்கத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இடம்பெறும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு விசேட பிரதிநிதிகள் நிகழ்வின் பிரதம பங்கு பற்றாளர்களாக இருப்பார்கள்.

சுதந்திர தின அணிவகுப்புக்கள் மற்றும் கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்கின்ற அனைவருக்கும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும்.

சுதந்திரதினத்துக்குமுன்னர்நடைபெறும் மத வழிபாடுகள் பெப்ரவரி 2 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். பெப்ரவரி 3 ஆம் திகதி மருதானை விகாரையில் தான நிகழ்வு இடம்பெறும். ஏனைய சர்வமத வழிபாடுகள் சுதந்திர தினத்தன்று நடைபெறும்.

அதற்கமைய பௌத்த மத வழிபாடுகள் காலை 6.30 மணிக்கு நாரஹேன்பிட்டியவிலுள்ள அபயராம விகாரையிலும் இந்து மத வழிபாடுகள் பம்பலபிட்டி புதிய கதிரேசன் ஆலயத்திலும் 6.35 மணிக்கு இஸ்லாம் மத வழிபாடுகள் கொழும்பு -4 நிமல்பாதை மஜ்மாயில் கமிராத் ஜும்மா பள்ளிவாசலிலும் 7.15 மணிக்கு கிறிஸ்தவ வழிபாடுகள் பொரளை தேவாலயத்திலும் நடைபெறும்.

அதனையடுத்து முப்படையினரின் மரியாதை அணிவகுப்பு நடைபெறும். இதில் 3 ஆயிரத்து 171 இராணுவத்தினரும் 808 கடற்படையினரும் 997 விமானப்படையினரும் 664 பொலிஸாரும் 432 விசேட அதிரடிப்படையினரும் 558 சிவில் பாதுகாப்புப் படையினரும் 336 தேசிய மாணவர் படையினரும் பங்குபற்றுவார்கள். இதனைத் தொடர்ந்து கலாசார அணிவகுப்பு இடம்பெறும்.

இதில் முப்படை, சிவில் பாதுகாப்புப் படை, பொலிஸ், தேசிய இளைஞர் பாதுகாப்பு படை மற்றும் மாகாணசபை கலாசார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடகக் கலைஞர்கள் உள்ளிட்ட 341 பேர் பங்கு பற்றுவார்கள். இம்மாதம் 29, 30, 31ஆம் திகதிகளிலும் பெப்ரவரி 1, 2, 3 ஆம் திகதிகளிலும் சுதந்திர சதுக்கத்தில் ஒத்திகைகள் இடம்பெறும்.

அத்தோடு சுதந்திர தினத்தன்று இடம்பெறும் முக்கிய நிகழ்வாக டீ.எஸ்.சேனாநாயக்கவின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும் வைபவம் காலை 7.15 மணிக்கு முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவின் பங்குபற்றலுடன் நடைபெறும்.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை சகல அரச திணைக்களங்களிலும் நிறுவனங்களிலும் தேசியக் கொடி பறக்கவிடப்படுவதோடு, 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் மின்விளக்கு அலங்காரங்களையும் செய்ய முடியும்.

இவ்வாறு எந்தவிதமான நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டாலும் குறைந்தளவானோரின் பங்குபற்றலுடன் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமையவே முன்னெடுக்கப்படும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிப்பதை நிறுத்துங்கள்!

## இந்து சமயப் பேரவையின் தலைவர் கோரிக்கை

தமிழ் மக்களின் காணிகளை படைமுகாம்கள் அமைப்பதற்காக சுவீகரிப்பதை அரசு உடனடியாகக் கைவிடவேண்டும்.

- யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசானசிவசக்திகிரீவன் இவ்வாறு கோரியிருக்கின்றார். இது தொடர்பில் அவர் மேலும் கோரியிருப்பவை வருமாறு:-

கடந்த காலப் போரில் பல்வேறு துன்பங்களை அனுபவித்த தமிழ்மக்களின் சொந்தக் காணிகளை படைமுகாம்களை அமைப்பதற்கு சுவீகரிக்கத் திட்டமிடுவது தமிழ்மக்களுக்கு செய்யும் மாபெரிரும் துரோகச் செயலாகும். இத்தகைய சகல நடவடிக்கைகளையும் அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

யுத்தத்தின் போது தமிழ் மக்களின் காணிகளில் படைமுகாம்களை தற்காலிகமாக அமைத்ததோடு அந்தக் காணிகளைப் பாவனைக்குதவாதபடி சீரழித்தனர். அங்கிருந்த வீடுகள், பொது நிறுவனங்கள், கோயில்கள் எனப் பல பெறுமதி வாய்ந்த கட்டுமானங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. இதனைப் பதவிக்கு வந்த அனைத்து அரசுகளும் எந்தவித தயவு தாட்சணியமுமின்றி நிறைவேற்றியுள்ளது.

போர்முடிந்த பின் கண்துடைப்பிற்காக சிறு தொகை நஷ்டஈடு வழங்கப்பட்டது. இந்நஷ்டஈடு வீடுகளைப் புனரமைக்கவோ, காணிகளைதுப்பரவுசெய்யவோ போதுமானதாக இல்லை.

இந்நிலையில் இருக்க முகாம்களை அமைக்கும் நோக்கோடு தமிழ் மக்களின் சொந்தக் காணிகளை சுவீகரிக்க நினைப்பது மாபெரும் துரோகச் செயலாகும்.

இது ஒரு புறமிருக்க போரின் முன் பகிர்ந்தளிக்கப்பட்ட பல அரச காணிகளை உரியவர்களுக்கு வழங்காது தந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன் வழங்கப்பட்ட காணிக்கான அனுமதிப்பத்திரமோ உறுதியோ இதுவரை வழங்காது இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. காணிப் பிணக்குகளை முறையாகத் தீர்க்காது மூன்று நான்கு தசாப்தங்களாக பல்வேறு இடையூறுகளை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்துவதற்கு சில தமிழ் அதிகாரிகளும் துணைபோகிறார்கள். இது சம்பந்தமாக பல்வேறு முறைப்பாடுகள் எமக்கு வந்த வண்ணம் இருக்கின்றன. இம்முறைப்பாடுகள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச காணி என்ற காரணத்தால் பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய அநீதிகளை ஜனாதிபதிக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளோம். நடவடிக்கை எடுப்பதாக பதில் கிடைக்கிறதே ஒழிய நடவடிக்கை எடுத்ததாக எம்மால் அறியமுடியவில்லை. ஆகையால் அரசு தமிழ் மக்களுக்கு ஒரு நீதியும், சிங்கள மக்களுக்கு ஒரு நீதியும் என்று செயற்படுவதை நிறுத்தி அனைத்து மக்களுக்கு சம நீதியை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# வாழைச்சேனையில் கடுமையான வெள்ளம் 3 ஆயிரத்து 800 ஏக்கர் விவசாயம் பாதிப்பு!



மட்டக்களப்பு, வாழைச்சேனை பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக மூவாயிரத்து எண்ணூறு ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய காணிகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை கமநல சேவை திணைக்களத்திற்குட்பட்ட விவசாய செய்கையில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள பெருக்கு காரணமாக மூவாயிரத்து எண்ணூற்றி ஐம்பது ஏக்கர் விவசாய செய்கை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை கமநல சேவை திணைக்கள பிரிவில் பதினையாயிரத்து ஐந்நூறு ஏக்கர் விவசாய செய்கை வெள்ளத்தாலும், கபில நிற தட்டு நோய் காரணமாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது விவசாய செய்கையைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையுடன், வெள்ள நீரின் காரணமாக வரம்பிலுள்ள மணல்கள் முழுவதும் வேளான்மையை மூடிக் காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வெள்ள நீர் சில வயல்நிலங்களில் தேங்கிக் காணப்படும் நிலையில் வேளான்மை கதிருடன் நீரில் வீழ்ந்து கிடப்பதால் வேளான்மை அழிவடைந்துள்ளதாகவும் கபில நிற தட்டு நோய்த் தாக்கம் காரணமாக சில வேளான்மைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். வெள்ளம் மற்றும் கபில நிற தட்டு நோய் காரணமாக இம்முறை எதிர்பார்க்கப்படும் விளைச்சல் கிடைக்காது என்றும் கூறப்பட்டுள்ளது.

## ரஞ்சனுக்கு அநீதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட காலமாக இவ்வாறான நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட வேண்டிய தேவையிருந்தும், பொதுநல நோக்கோடு அநேக வரைவுகள் வரையப்பட்டும் சட்டங்கள் இயற்றப்படவில்லை.

எனவே காட்டுக்கழுதைக்கு கிடைத்த சுதந்திரம் போல எவரும் எதனையும் தீர்ப்பளிக்க கூடியதொரு சூழ்நிலை காணப்படுகின்றது. இதுவே பாரதூரமான விவகாரமாகும்.

மேலும் உள்ளூர் சட்டங்கள் இயற்றப்படாத நிலையில் ஆங்கில சட்டமே நடைமுறையில் கடைபிடிக்கப்படுவதாலும், ஆங்கில சட்டத்தில் இப்படியான கூற்றுக்கள் நீதிமன்ற அவதூறாகக் கணிக்கப்படுவதில்லை என்பதனை கருத்தில் கொள்ளாது, இத்தகைய தீர்ப்பை அளித்தமை தவறானதொரு போக்கு என்பதே எனது நிலைப்பாடு. மேலும் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்படுவதில் இருக்கும் வெற்றிடமானது நேர்மையானதொரு நாடளுமன்ற உறுப்பினருக்கு அசாதாரணமுறையில் அநீதி இழைக்கப்பட வழி வகுத்துள்ளது.-சுட்டிக்காட்டினார் அவர்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.01.2021இல் வெளியிடப்பெற்றது.